# Centre for Research on the Economics of Ageing

NEWSLETTER – ISSUE 9

MARCH 2019

சிங்கப்பூரில் உள்ள முதுமையடைதல் தொடர்பான நடத்தை சார்ந்த அம்சங்கள் குறித்து ஒரு நீண்டகால ஆய்வில் ஈடுபடுவதே CREA-வின் குறிக்கோளாகும். மாதாந்திரக் கருத்தாய்வுப் பங்கேற்பு மூலம் நீங்கள் வழங்கும் அசைக்க முடியாத ஆதரவானது, இந்த இலக்கை நாங்கள் உறுதியாக அடைய எங்களுக்கு உதவும் ஒரு வலுவான தூணாக உள்ளது.

சிங்கப்பூரில் உள்ள குடும்பங்கள் தங்களுடைய பணி ஓய்வுக்காக பொருளாதார ரீதியாக எந்தளவிற்குத் தயார்நிலையில் உள்ளனர் என்பதைக் கண்டறிவதே எங்களுடைய ஆராய்ச்சி ஆய்வின் முக்கிய இலக்குகளில் ஒன்றாகும். அதன் காரணாமாகத் தான் நாங்கள் சிங்கப்பூரர் குடும்பங்களுடைய சொத்துக்களின் இருப்புக்கணக்கை அறிவதற்கு ஜனவரி மாதக் கருத்தாய்வில் ஒரு சிறப்புப் பகுதியைச் சேர்த்தோம். இந்தப் பகுதி குறிப்பாக இரண்டு காரணங்களுக்காக விரிவாகக் கூறப்பட்டது. முதலாவதாக, பெரும்பாலான மக்களுக்குத் தங்கள் சொத்துக்களின் ஆகமொத்த மதிப்பைக் கணக்கிடுவது சிரமமாகும். இந்தத் தகவல்களைத் துல்லியமாக உருவாக்குவதற்கு, ஒவ்வொரு பாகத்தையும் ஆராய்வது உதவுகிறது. இரண்டாவதாக, குடும்பங்களின் சொத்துக்களில் உள்ளடங்கியுள்ளவை நமது ஆய்வுக்கு மிகவும் முக்கியமானவை. உதாரணமாக, மசேநி சேமிப்புகள் தேவைக்குக் குறைவாக உள்ளதா, உங்களின் அன்றாடத் தேவைகளுக்குப் பணமளிக்க நீங்கள்  வேறு ரொக்கமாக்கக்கூடிய சொத்துக்களை வைத்திருக்கிறீர்களா, அல்லது வாழ்க்கையை நடத்துவதற்கு உங்கள் குடும்பம் ஒரு சிறு தொழிலை நடத்துகிறதா மற்றும் இது போன்ற விவரங்களை நாங்கள் அறிய வேண்டியுள்ளது.




## குறிக்கோள் மற்றும் விவரிப்பு

எங்கள் ஆய்வின் நோக்கத்தை விரிவடையச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு, 2018 ஆகஸ்டு 29 மற்றும் 30ம் தேதியன்று மூப்படைதல் குறித்த ஜப்பான்-சிங்கப்பூர் கல்விசார் கருத்தரங்கை CREA ஏற்பாடு செய்தது. இந்தக் கருத்தரங்கின் குறிக்கோள்கள் கீழ்க்கண்டவாறு இருந்தன:

- இந்த இரண்டு நாடுகளில் இருந்து தொடர்புடைய ஆராய்ச்சி நிலையங்களால் பிரசுரிக்கப்பட்ட சுகாதாரம் மற்றும் தொழிலாளர் தொடர்பான தலைப்புகளில் இருந்த முக்கிய ஆய்வு முடிவுகள் குறித்தக் கலந்துரையாடல்
- சிங்கப்பூருக்கும் ஜப்பானுக்கும் இடையே உள்ள மூப்படைதல் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் கொள்கைகளுக்கு இடையிலான சரியொத்த நிலைகளை வரையறுத்தல்
- CREA மற்றும் HIAS ஹெல்த்தில்1 உள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு இடையே கூட்டுப்பணிகளை மேம்படுத்துதல்[1]

இந்தக் கருத்தரங்கில் பல்வேறு கல்வி நிறுவனங்கள், கொள்கைப் பகுப்பாய்வாளர்கள், அரசாங்க அமைப்புகள் மற்றும் அரசுசாரா அமைப்புகள் கலந்துகொண்டன. முதல் நாளன்று, CREA மற்றும் ஹிட்டோட்சுபாஷி பல்கலைக்கழகம் ஆகிய இரண்டில் இருந்தும் வந்திருந்த ஆராய்ச்சியாளர்கள், 10 கல்விசார்ந்த காட்சியளிப்புகளில் ஈடுபட்டனர். அவற்றில் உடல்நல அதிர்ச்சிகள், வேலைவாய்ப்பின்மை மற்றும் பணி ஓய்வுக்கான போதுமான நிதிப் பாதுகாப்பு ஆகிய விவகாரங்கள் உள்ளடக்கியிருந்தன. இரண்டாம் நாளன்று நடைபெற்ற கொள்கை வட்டமேசையின் போது, நீங்கள் எங்களிடம் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் கொள்கைப் பரிந்துரைகள் குறித்து விரிவான கலந்துரையாடல்கள் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டனர்

## ஆகப்பெரிய பரிந்துரைகள்

ஜப்பானுக்கும் சிங்கப்பூருக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் நாங்கள் பகுப்பாய்வு செய்வதற்கான ஒரு அடித்தளத்தை இந்தக் கருத்தரங்கமும் கொள்கை வட்டமேசையும் உருவாக்கின.

சர்வதேச அளவில் பிரபலமான தரவு ஆதாரமாக CREA வளர்ந்து வருகிறது. இதைச் சாத்தியமாக்கியதற்காகவும், கொள்கைகளையும், இன்றைய மற்றும் நாளைய சந்ததியினரின் எதிர்காலத்தையும் வடிவமைப்பதற்கு நீங்கள் மேற்கொண்டு வரும் அயராத முயற்சிகளுக்காகவும் உங்கள் அனைவருக்கும் நன்றி.

## நாம் ஒவ்வொருவரும் ஒரு வித்தியாசத்தை உருவாக்க முடியும். நாம் ஒன்றிணைந்து மாற்றத்தை ஏற்படுத்துவோம்.


- பார்பரா மிக்குல்ஸ்கி

[1] HIAS ஹெல்த் மேம்பட்ட ஆய்வுக்கான ஹிட்டோட்சுபாஷி இன்ஸ்டிட்யூட்டில் உள்ள சுகாதாரக் கொள்கை மற்றும் பொருளியலுக்கான ஆராய்ச்சி நிலையம்

# முக்கிய ஆய்வு முடிவுகள் மீதான பார்வை


இந்தப் பிரிவில், ஜப்பான்-சிங்கப்பூர் கல்விசார் கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட முக்கிய ஆய்வு முடிவுகளை நாங்கள் உங்களிடம் பகிர்ந்துகொள்கிறோம்.

## சிங்கப்பூர் மற்றும் அமெரிக்காவில் உள்ள வேலை எதிர்பார்ப்புகள்




எங்கள் கருத்தாய்வுகளில், 62, 65 மற்றும் 70வது வயதில் வேலை செய்வது தொடர்பான உங்களின் எதிர்பார்ப்புகள் குறித்து நாங்கள் உங்களிடம் கேட்டிருந்தோம். ஒரு ஆழ்ந்த பகுப்பாய்வை மேற்கொள்வதைக் குறிக்கோளாக கொண்டு, அமெரிக்கர்களிடமிருந்து சேகரித்த தரவுகளுடன் உங்கள் அனைவரிடமிருந்து சேகரித்த தரவுகளை நாங்கள் ஒப்பிட்டுப் பார்த்தோம். குறிப்பிடத்தகுந்த அளவிற்கு, அமெரிக்கர்களைக் காட்டிலும் அதிக அளவிலான சிங்கப்பூரர்கள் தங்களின் 65 மற்றும் 70வது வயதில் தாங்கள் வேலை செய்வதற்கு எதிர்பார்க்கின்றனர். உண்மையில், இந்த முடிவு சிங்கப்பூரர்களிடம் இருக்கும் கடுமையாக உழைக்கும் மனநிலையின் ஓர் எடுத்துக்காட்டாகும்.

## உணரக்கூடிய ஆரோக்கிய நிலைமை




சமீபத்திய கருத்தாய்வில், பிரமாதம், மிகவும் சிறப்பு, சிறப்பு, மோசமில்லை அல்லது மோசம் ஆகிய விருப்பத்தேர்வுகளில் உங்கள் ஆரோக்கியத்தைத் தரமிடுமாறு உங்களைக் கேட்டுக்கொண்டோம். இருபாலினத்தவர்களிலும் பெரும்பான்மையான பதிலளிப்பாளர்களும் தங்கள் ஆரோக்கிய நிலைமை சிறப்பாக இருக்கிறது என்று உணர்கின்றனர். சிங்கப்பூரர்கள் தங்கள் ஆரோக்கிய நிலைமையில் திருப்தியாக உள்ளனர் என்பதையும், அவர்கள் தாங்கள் எதிர்பார்க்கும் ஆரோக்கிய நிலையைப் பேணுவதை உறுதிசெய்வதற்குப் போதிய முயற்சியை மேற்கொள்கின்றனர் என்பதையும் இது நிரூபிக்கிறது. சிங்கப்பூரர்களுக்குப் பாராட்டுக்கள்!

# சந்திப்பு நடைபெறும் இடங்கள்

### பீஷான் மைண்ட் ஸ்ட்ரெச்சர் (Bishan Mind Stretcher)

510 பீஷான் தெரு 13 #03-01 சிங்கப்பூர் 570510

### புக்கிட் மேரா மீட்புக் கணக்காளர்கள்

164 புக்கிட் மேரா சென்ட்ரல் #03-3655, சிங்கப்பூர் 150164

### ஜூரோங் கிழக்கு ரெகுஸ் பிசினஸ் லாஞ்ஜ்

21 ஜூரோங் கிழக்கு சென்ட்ரல் 1 ஜூரோங் கிழக்கு ரீஜனல் லைப்ரரி லெவல் 1, சிங்கப்பூர் 609732

### தெம்பினிஸ் NTUC இன்கம் பில்டிங்

300 தெம்பினிஸ் அவென்யு 5 லெவல் 9 தெம்பினிஸ் ஜங்ஷன், சிங்கப்பூர் 529653

### செம்பவாங் ஜஸ்ட் எஜு லேர்னிங் சென்டர்

30 செம்பவாங் ட்ரைவ் #04-04 சன் பிளாஸா, சிங்கப்பூர் 757713

# கருத்தாய்வுகள் நடைபெறும் தேதிகள்

- ஏப்ரல் மாதக் கருத்தாய்வு: **1-21 ஏப்ரல் 2019**
- மே மாதக் கருத்தாய்வு: **1-26 மே 2019**
- ஜூன் மாதக் கருத்தாய்வு: **1-23 ஜூன் 2019**

# இரகசியக்காப்பு மற்றும் உங்களின் தனியுரிமை

நீங்கள் எங்களிடம் அளிக்கின்ற தகவல்களை நாங்கள் சிங்கப்பூர் தனிநபர் தகவல் பாதுகாப்பு ஆணையத்தின் சட்டதிட்டத்திற்கு உட்பட்டு, தனிநபர் தகவல் பாதுகாப்புச் சட்டம் 2012 (PDPA) -இன் கீழ் மிகுந்த இரகசியத்துடனும், முழுமையான இணக்கத்துடனும் வைத்துக்கொள்வோம். எங்களுடைய சர்வர்கள் மற்றும் இணையத்தள உலாவிகளுக்கு இடையிலான தரவுப் பரிமாற்றங்கள், உயர் பாதுகாப்பைக் கொண்ட புரொட்டகால்களைப் பயன்படுத்திக் கையாளப்படுகின்றன. மேலும், எங்களுடைய டொமைனில் ஒரு SSL சான்றளிப்பு நிறுவப்பட்டுள்ளது. உங்களின் தனிப்பட்ட தரவுகளும் கருத்தாய்வுப் பதில்களும் தனித்தனியாக சர்வர்களில் வைத்துக்கொள்ளப்படுகின்றன. இதன்மூலம், நீங்கள் வழங்கும் தரவுகளைக் கொண்டு உங்களை அடையாளம் காண முடியாது.அடையாளம் நீக்கப்பட்ட தரவுகள் மீது தான் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது. ஒற்றைக் கவனிப்பாய்வுகள் மீது ஒருபோதும் மேற்கொள்ளப்படுவதில்லை. இந்த அடையாளம் நீக்கப்பட்ட தரவுகள் SMU-ஆல் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்களால் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. சேகரிக்கப்படும் முடிவுகள் ஆராய்ச்சி நோக்கங்களுக்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் மற்றும் புள்ளிவிவரங்களாகத் தெரிவிக்கப்படும். உங்கள் விவரங்கள் வர்த்தக நோக்கங்களுக்காகப் பிற அமைப்புகளுடன் ஒருபோதும் பகிர்ந்துகொள்ளப்பட மாட்டாது.

# எங்களைத் தொடர்புகொள்க

உங்கள் முகவரி அல்லது தொலைபேசி எண்ணை நீங்கள் மாற்றியிருந்தால், கருத்தாய்வை நிறைவுசெய்வதில் உங்களுக்கு ஏதேனும் வடிவத்தில் உதவி தேவையென்றால், அல்லது உங்களுக்கு ஏதேனும் கேள்விகளோ, கருத்துக்களோ இருந்தால், தயவுசெய்து **6808 7910** என்ற எங்களுடைய மையத்தின் நேரடித் தொலைபேசி எண்ணில் தொடர்புகொள்ளுங்கள் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை) அல்லது **slp@smu.edu.sg** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.உங்களிடமிருந்து கருத்துக்களைக் கேட்பதற்கு நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியடைகிறோம்.

SMU
SINGAPORE MANAGEMENT UNIVERSITY